Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


## பங்காளர்களுக்கான ஆசீர்வாத ஜெபம்

**விஜயவாடாவில்**

நாள் : ஏப்ரல் 10
(சனிக்கிழமை)

இடம் : ஹோட்டல் இலபுரம்
கன்வென்ஷன் ஹால்,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
காந்திநகர், விஜயவாடா

காலை 10 முதல் மதியம் 2 மணி வரை
மாலை 4 மணி முதல் 9 மணி வரை



**ராஜமந்திரியில்**

நாள் : ஏப்ரல் 11
(ஞாயிற்றுக்கிழமை)

இடம் :
ஹோட்டல் ஷெல்டன் ஹால்,
RTC காம்ப்ளக்ஸ் ரோடு,
ராஜமந்தரி

மாலை 3 மணி முதல்
இரவு 9 மணி வரை

பிரார்த்தனை

**Dr. ஆனந்த ஸ்திரா**

தொடர்புக்கு : 91770 87860, 99445 36343





நமது YouTube சேனலில் தொடர்ந்து தவறாமல் பாருங்கள்


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:7 இதழ்:4 ஏப்ரல் 2021 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL:7 ISSUE NO:4 April 2021 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



**தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.**
\- மத்தேயு 28:6



## Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் கர்த்தர் செய்த அற்புதங்கள்

### கேன்ஸர் கட்டி அற்புதமாக கரைந்து சுகமாகும்படி செய்த தேவன்!

நான் பட்டுகோட்டை அருகில் உள்ள கிராமப் பகுதியில் வசிக்கின்றேன். மஞ்சள் காமாலை நோயினால் நான் பாதிக்கப்பட்டபடியாலும், சிறுநீரகக் கல் உருவானபடியாலும் CT-Scan எடுத்தோம். report-ல் எனக்கு **obstructive colon cancer** என்று கண்டுபிடித்தார்கள். சென்னையிலுள்ள புகழ்பெற்ற மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டேன். மருத்துவர்கள் எனது வயிற்றுப் பகுதியில் அறுவை சிகிச்சை செய்தார்கள். மேலும் மருத்துவர்கள் கேன்ஸர் கட்டி மீண்டும் வரும், அத்துடன் தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சை தொடரு மாறு எனக்கு ஆலோசனை சொன்னார்கள். இதைக் கேட்டு நானும், எனது குடும்பத்தினரும் மனம் கலங்கி னோம். ஒவ்வொரு நாளும் கண்ணீரில் நாட்களை கழித்து வந்தேன். அதேபோல தஞ்சை மருத்துவமனையில் பரிசோதனை செய்தபொழுது வயிற்றில் கேன்ஸர் கட்டி இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதை அறிந்து அதிக கவலையடைந்தேன்.




எனது வாழ்க்கை அவ்வளவுதான் என மனங்கலங்கி இருந்த பொழுது எனது அருகாமை வீட்டில் இருந்த எனது சித்தி **திருச்சியில் உள்ள அன்பரின் ஊழியத்தைப் பற்றியும், குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் குறித்தும், அங்கு இயேசுகிறிஸ்து செய்யும் அற்புதங்களை பற்றியும் கூறினார்கள்.** மிகுந்த நம்பிக்கையோடு நவம்பர் மாதம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டேன். அந்நாளில் ஜெப வேளையில் **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எனது**




**- திரு. வினோத்குமார், பட்டுக்கோட்டை**

இதன் தொடர்ச்சி 14ஆம் பார்க்க



## கடந்த நாட்களில் திருச்சி, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டங்களில் Rev. Dr. A. ஜாஷ்வா அவர்களின் உருக்கமான ஜெபத்தின் மூலம் தேவாதிதேவன் செய்த அற்புதங்களில் சில...

### ஜெபத்தைக் கேட்கும் அன்பின் தேவன்



17ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தது. ஆண் குழந்தை வேண்டுமென அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்து சென்ற **அந்த நாட்களில் கர்த்தர் எனக்கு கிருபை யாக ஆண் குழந்தையை கொடுத்தார்.** கர்த்தர் மகனை அற்புதமாக நடத்தி ஆசீர்வதித்து வருகிறார். அதுமாத்திரமல்ல, எனது மூத்த மகளின் திருமண காரியத்திற்காக 2019ஆம் ஆண்டு இங்கு நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் ஜெபித்து சென்றேன். **கர்த்தர் எனது மகளுக்கு திருமண காரியத்தை வாய்க்கச் செய்தார். 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் தேதி தேவகிருபையால் மகளின் திருமணம் நல்லபடியாக முடிந்தது.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! **- திருமதி. ஞானபாய், நாகர்கோவில்**

### ஆழ்துளையில் தண்ணீர் வர கிருபை செய்த தேவன்



எங்களது தோட்டத்தில் இரண்டு முறை ஆழ்துளை போட்டோம். எனினும் தண்ணீர் வரவில்லை. இதனால் மிகவும் கவலையடைந்தோம். இந்நிலையில் அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் மூலம் எங்கள் நிலையை தெரிவித்தோம். அவர்கள் ஜெபித்து இந்த முறை கட்டாயம் கர்த்தர் அற்புதம் செய்வார் என பதில் கடிதம் அனுப்பினார்கள். **அதன்பிறகு மீண்டும் ஆழ்துளை தோண்டினோம். கர்த்தர் கிருபையாக தண்ணீர் வரும்படி அற்புதம் செய்தார்.** மேலும், எனது காலில் ஏற்பட்டிருந்த புண் ஜெபத்தினால் ஆறினது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! **- திரு.யோவான், மணல்விளை**

### ஊரல் நோயிலிருந்து அற்புத சுகம்



**கடந்த இரண்டு மாத காலமாக எனது சரீரத்தில் ஊரல் ஏற்பட்டு மிகவும் கஷ்டப் பட்டேன்.** இந்நிலையில் திருநெல்வேலியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில் **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் ஜெபிக்கும் பொழுது **கர்த்தர் என்னை தொட்டார். அந்த நேரமே எனக்கிருந்த ஊறல் நின்று போனது, பரிபூரண சுகத்தை பெற்றுக்கொண்டேன்.** சுகம் தந்த தேவனை துதிக்கின்றேன். **- Sis. ரோஸ்லின், சாத்தான்குளம்**

### வாக்குத்தத்தத்தின்படி அதிசயம் செய்தார்



2020ஆம் ஆண்டில் விடுதலையின் திருச்சபையில் **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்கள் **"உன்னை அதிசயங்களை காணப்பண்ணுவேன்"** என்ற வாக்குத்தத்த செய்தியை கொடுத்தார்கள். அது எனக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. அதை எனக்கு கர்த்தர் தந்த வாக்குத்தத்தமாக விசுவாசித்து ஜெபித்தேன். அதன்படி **கடந்த 8 வருடமாக என்னோடு பேசாதிருந்த எனது அக்கா என்னை தேடி வந்து என்னிடம் சமாதான மானார்கள்.** கர்த்தர் செய்த இந்த அதிசயத்திற்காக அவரை துதிக்கின்றேன். **- Sis. ரோஸ்லின் மேரி, திருச்சி**

### இருதய வலி மறைந்தது



**எனது இடது கை வலி மற்றும் இருதய வலியுடன் பேருந்தில் பயணம் செய்து வந்து உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்தில் கலந்துகொண்டேன்.** ஜெப வேளையில் வியாதியுள்ளவர்களுக்காக **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்கள் ஜெபித்த பொழுது **எனக்கிருந்த இடது கை வலி, இருதய வேதனைமுற்றிலும் சுகமானது.** அற்புதம் சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! **- Sis. கமலாதேவி, திருச்சி**

# அன்பரின் ஊழியம்

மலர் : 7 ◆ ஏப்ரல் 2021 ◆ இதழ் 4




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் - ஏசாயா 53 : 5**

**உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் - தானியேல் 4 : 25**

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் - 1 கொரி. 15 : 57**

வாசகர்களாகிய அன்பான தேவ பிள்ளைகளுக்கு!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது உளமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேற்சொல்லப்பட்ட திருமறை வாசகங்கள் நமக்கு எவ்வளவு ஆறுதலாய் இருக்கிறது. கிறிஸ்து இயேசு நமக்காக மரிக்காவிட்டால் நாம் பாவங்களிலே மரித்து போயிருப்போம். **(எபேசியர் 2:1)** ஆனால் தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து நமக்காக மரித்தபடியால் நம்முடைய பழைய வாழ்க்கை அவரோடுகூட சிலுவையில் அறையப்படுகிறது. **(கலாத்தியர் 2:21)** உலகத்தின் கேடுபாடுகளும் அவரோடு சிலுவையில் அறையப்பட்டு நாம் கிறிஸ்துவில் புது சிருஷ்டிகளாய் மாற்றப்படுகிறோம். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம் எல்லோருடைய பாவங்களையும் கழுவி சுத்தம் செய்கிறது. எனவே தான் இயேசு **"அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக் கிறது; போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" (லூக்கா 22:19)** என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். சில வெளிநாடு


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/-. ஆயுள் சந்தா ரூ.2,000/-.

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1,500/-. ஆயுள் சந்தா ரூ.15,000/-.



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605 (24** மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.mojworld.org & www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

களில் உள்ள கிறிஸ்தவர்கள் பரிசுத்த இராப்போஜனத்தை அனுதினமும் உட்கொண்டு கிறிஸ்து இயேசுவின் சிலுவையின் அன்பை தினமும் நினைவுகூறுவார்கள்.

சமீப காலத்தில் மீண்டும் கோவிட் 19 பரவிக் கொண்டிருப்பதை பத்திரிக்கைகள் வாயிலாக நாம் அறிகிறோம். இந்த வியாதி வாசகர்களாகிய உங்களை அணுகாதபடிக்கு நாங்கள் உங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கிறோம். **(சங்கீதம் 91:1-16)** என் தந்தையின் பிறந்தநாளை முன்னிட்டு ஜெபித்து உதவிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். அந்த நாளை மிகவும் சிறப்பாக கொண்டாட கர்த்தர் கிருபை செய்தார். அவர்களுக்கு கர்த்தர் இன்னும் ஒரு ஆண்டை கூட்டி கொடுத்ததற்காக தேவனை துதிக்கின்றோம்.

ஐந்து மாநிலத்தில் நடக்கும் தேர்தலில் எல்லோரையும் நேசிக்கின்ற, ஜாதி, மத, இன, தகுதி பாராத தலைவர்கள் வெற்றி பெற ஊக்கமாய் ஜெபிப்போம். நாம் ஜெபத்தில் எதை வேண்டுகிறோமோ அதை நிச்சயமாய் கர்த்தர் இயேசு நம்முடைய வாஞ்சை நிறைவேற செய்து முடிப்பார். ஒவ்வொரு நாளும் தனி ஜெபத்தில் திருச்சபைகள் மற்றும் ஆவிக்குரிய சபைகளுக்காக ஊக்கமாய் ஜெபிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். **(மத்தேயு 6: 6-8; 16 - 18)** கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்!

நம் ஊழியத்தின் மூலமாய் செய்யப்படுகிற எல்லா ஊழியங்களையும் கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதிக்க இன்னும் பல புதிய காரியங்களை செய்யவும் ஊக்கமாய் ஜெபியுங்கள். குறிப்பாக சுவிசேஷவாசல்கள் நம் பாரத தேசத்தில் திறக்கப்பட ஜெபியுங்கள். எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவின் அன்பை நாம் பிரதிபலிக்கிறவர்களாக இருப்போம்.

நமது ஜெப ஸ்தல பராமரிப்பு பணிகளுக்கென்று உற்சாகமாய் கொடுங்கள். எங்களுடைய எல்லா செய்திகள், பாடல்கள் அனைத்தையும் நமது யூட்யூப் சேனல்களில் பார்த்து மகிழுங்கள்.

வாசர்களாகிய நீங்கள் உங்கள் வாட்ஸ் அப் நம்பரை எங்களுக்கு அனுப்புங்கள். அப்பொழுது சமூக வலைதளங்களில் வரும் நிகழ்ச்சிகள் குறித்த விபரங்களை உங்களுக்கு அனுப்ப அது மிகுந்த உதவியாக இருக்கும். மார்ச் 13 அன்று அனைத்து சிறுவர்களுக்கும் நல்ல உணவு கொடுக்கப்பட்டது. சேலத்திலுள்ள 32 எளிய கிராமங்களில் நாங்கள் சொல்லிக் கொடுக்கும் பிள்ளைகளில் 400 பேருக்கு எனது தந்தையின் பிறந்த நாள் விருந்து அளிக்கப்பட்டது. பிள்ளைகளின் பெற்றோர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

**அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.**

**ஆமென்! மாற்கு 16 : 20**

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனைத்திற்காகவும் ஊக்கமாய் ஜெபிக்கிறோம். இயேசு கிறிஸ்து திமிர்வாதமாய் இருந்த மனிதனை எழுப்புவதற்கு இரவு முழுவதும் ஜெபித்தது போல நாங்களும் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபிக்கிறோம். சீக்கிரமாய் சுவிசேஷகூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி கிடைக்க ஜெபியுங்கள். **"சுவிசேஷம் அறிவிக்காமல் இருந்தால் எனக்கு ஐயோ" (1 கொரி. 9:16)** என்று பவுல் சொல்வது போல நாம் சூழ்நிலை வாய்க்கும் பொழுது எல்லாம் சுவிசேஷத்தை சொல்வோம். கர்த்தருடைய சிலுவையின் அன்பான சுவிசேஷராஜ்ஜியத்தை எழுப்பி கட்டுவோம். **"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" (1 கொரி. 1: 18)**

நம்முடைய பத்திரிக்கை e-magazine வடிவில் வலைதளத்திலும் உண்டு. உங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுக்கு சொல்லி அதை படித்து அறிந்துகொள்ள சொல்லுங்கள். தேவன் தாமே உங்கள் அனைவரோடுங்கூட இருந்து ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

**இம்மாத வாக்குத்தத்தம்**

**எரேமியா 32:27; 33:3**
**மத்தேயு 7:7–10; 6:33**
**எபேசியர் 1:3**
**நீதிமொழிகள் 19:17**

# இதயம் தொட்ட எண்ணம்

## Resurrection -
## The author of life conquered the author of death.

## உயிர்த்தெழுதல் –
## ஜீவாதிபதி மரணத்தின் அதிபதியை வென்றார்

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**


**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. 10848469699 | Account No. 10848559426 | Account No. 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.



# இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
# (The resurrection of Jesus Christ)

**தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா**

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான அன்பரின் ஊழிய பத்திரிக்கை வாசர்களுக்கு, உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் வல்ல நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள் இந்த மாதத்தின் ஈஸ்டர் சிறப்பு செய்தியின் மூலமாக உங்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மெய்யாகவே இப்புதிய மாதத்தில் தம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமை யினாலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களை பெலப்படுத்தி ஸ்திரப்படுத்தி பாதுகாத்து ஆசீர்வதிப்பாராக!

இந்த மாதத்தில் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் பண்டிகையை நாம் ஆசரிப்பதினால் உயிர்த்தெழுதலின் செய்தியை உங்களோடு நான் பகிர்ந்துக்கொள்ள விரும்பு கிறேன். **தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். (He has risen, Just as he said.)** மத்தேயு 28:6-ல் வேதம் சொல்கிறது. அவர் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். இது எத்தனை உண்மை யானது.

இயேசு சிலுவையிலே நமக்காக மரித்த ஒரு நாள்தான் புனித வெள்ளி. அதேப்போல அவர் தற்சுரூபமாய் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த நாள்தான் ஈஸ்டர் திருநாள். உயிர்த்தெழுதல் சிலுவையை மையப் படுத்துவதாக அல்லது நியாயப்படுத்துவதாக கருதப்படுகிறது. **Easter gives significance to the Cross அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான் களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.** ரோமர் 4:25. மேற்சொல்லப்பட்ட வசனத்தின்படியே அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து நாம் நீதிமான் களாக்கப்படுவதற்காகத்தான் எழுப்பப்பட்டார் என்பதே இதன் பொருள்

சிலுவை உயிர்த் தெழுதலின் மையமாக காணப்படுகிறது. The cross is the heart of Easter. புனித வெள்ளி, உயிர்த்தெழுதலின் நாள் இரண்டுமே பிரிக்க முடியாதவை. ஏனெனில் இரண்டுமே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. இயேசு உயிர்த் தெழாவிட்டால் அவருடைய மரணம் அர்த்தமற்ற தாகும். அதேப்போல அவர் சிலுவையிலே நம்முடைய பாவங்களுக்காக இரத்தத்தை சிந்தாவிட்டால் அவருடைய உயிர்த்தெழுதலும் அர்த்தமற்றதாகி விடும். **மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமா யிருக்கிறார்.** ரோமர் 1:5

இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி நாம் பேசும்பொழுது மூன்று காரியங்கள் தெரிந்துக கொள்ளவேண்டியவைகளாக இருக்கிறது.

1. அவர் சிலுவையிலே அறையப்பட்டார். (He was crucified)
2. அவர் அடக்கம் பண்ணப்பட்டார். (He was buried)
3. அவர் உயிர்த்தெழுந்தார். (He was resurrected)

இயேசுகிறிஸ்துவை கபாலஸ்தலம் என்கின்ற இடத்தில் இரண்டு குற்றவாளி களுக்கு மத்தியில்

சிலுவையில் அறைந்தார்கள். அவர் சிலுவையிலே ஆணி அடித்து கொலை செய்யப்பட்டார். அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக் காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். அப்போஸ். 2:23 சிலுவையில் மரித்துப்போன இயேசுவின் சரீரத்தை அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு என்பவன் பிலாத்துவினிடத்தில் போய் கேட்டு வாங்கி அதை மெல்லிய துப்பட்டியில் சுற்றி கன்மலையில் வெட்டப்பட்ட ஒருக்காலும் ஒருவரும் வைக்கப்படாத கல்லறையிலே வைத்தான். இந்தப்பகுதியை நாம் (லூக்கா 23:50-53) வரை வாசிக்கிறோம். கல்லறையில் வைக்கப்பட்டு பெரிய கல்லினால் அடைத்து வைக்கப்பட்ட இயேசு தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். மத்.28:6 தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது. அப்.2:24.

மரணம் இயேசுவின் உயிர்த்தெழுதலை கட்டுப்படுத்த முடியவில்லை. சிலுவையில் அறையப்பட்டு அடக்கம்பண்ணப்பட்ட இந்த இயேசுவையே தேவன் உயிர்த்தெழுதலின் மூலமாக ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார். (அப்போ 2:36) எனவே இயேசுவின் உயிர்த் தெழுதல் வரலாற்று சிறப்பு மிக்கது. முக்கியத்துவம் வாய்ந்தது.

## ஏன் இயேசுவின் உயிர்த்தெழுதல் முக்கியத்துவம் வாய்ந்தது? (Why Jesus' resurrection is important?)

இயேசுவின் உயிர்த்தெழுதல் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்கும் விதமாக 3 குறிப்புகளை இந்த செய்தியின் மூலமாக கூறவிரும்புகிறேன்.

### 1. இது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அவசியமானது (It is essential to the Christian faith)

இயேசுவின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால் கிறிஸ்தவம் இல்லை. கிறிஸ்தவம் என்பதை நாம் எண்ணிப்பார்க்கக்கூடாததாய் இருக்கும். கிறிஸ்தவத்திற்கு ஒரு அடித்தளமே இயேசுவின் உயிர்த்தெழுதல்தான். இன்றைக்கு உலகமெங்கும் கிறிஸ்தவ மார்க்கமும், கிறிஸ்தவ மக்களும், கிறிஸ்துவின் பணிகளும் காணப்படுவதற்கு காரணம் இயேசுவின் உயிர்த்தெழுதல் தான். எனவே அவருடைய உயிர்த்தெழுதல் நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மிக மிக அவசியமாயிருக்கிறது.

### 2. இது நம்முடைய இரட்சிப்பிற்கு அவசியமானது. (It is essential to our salvation)

ஏற்கனவே நான் கூறினபடி இயேசு மரணத்தினின்று உயிர்த்தெழுந்திரா விட்டால் அவருடைய மரணம் மிகவும் அர்த்தமற்றதே. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். I கொரி.15:17. இயேசு உயிர்த்தெழாவிட்டால் நமக்கு நம்பிக்கையுமில்லை. பாவ விமோசனமுமில்லை. இரட்சிப்புமில்லை. எனவே இரட்சிக்கப்படுவதற்கு அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தது மிகவும் அவசியமானது.

### 3. இது நம்முடைய எதிர்கால நம்பிக்கைக்கு அவசியமாயிருக்கிறது. (It is essential to our future hope)

கிறிஸ்து உயித்தெழாவிட்டால் நாமும் ஒரு நாள் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கை அற்றவர்களாக இருப்போம். ஆனால்

இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கெல்லாம் ஒரு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை தருகிறது. அது எதிர்காலத்தை குறித்ததான, இன்னும் சொல்லப் போனால் நம்முடைய மரணத்திற்குப் பிறகு காணப்படும் ஒரு மகிமையான வாழ்வைக் குறித்த நம்பிக்கை ஆகும். எனவேதான் (1கொரி.15:14-16) வரைக்கும் பவுல் இவ்விதமாக கூறுகிறார்.

- கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா.
- மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக்குறித்துச் சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே.
- மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை.

கிறிஸ்து உயிரோடு எழுந்ததினால் இன்றைக்கு அவரைக்குறித்ததான பிரசங்கங்கள் பெலனுள்ளதாக, வல்லமையுள்ளதாக, பிரயோஜனமுள்ளதாக ஜனங்கள் மத்தியில் செயலாற்றுகிறது. அதனால் மக்களும் விசுவாசித்து பெலப்படுகிறார்கள். இந்த விசுவாசம் ஜனங்களுடைய எதிர்காலத்தைக் குறித்த அச்சத்தை நீக்கி, ஒரு நம்பிக்கையை கொடுக்கிறது. அந்த நம்பிக்கைத்தான் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை (Hope of Resurrection) சரீர மரணத்திற்குப் பிறகும் ஒரு வாழ்வு உண்டு என்பதை இதன் மூலம் நாம் ஆழமாக அறிந்துக் கொள்ள முடிகிறது. இயேசுவின் உயிர்த்தெழுதல் உலகம் அறிந்த ஒரு உண்மை. (Universal Truth) இது ஒரு வரலாற்று சம்பவம் (Historical event)

## இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் (Convincing proofs of Jesus' Resurrection)

இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அநேக நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றது. அதைத்தான் பரிசுத்த லூக்கா அப்போஸ்தலர் 1:3-ல் அருமையாக கூறுகிறார். (அவர் பாடுபாடு பட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தல ருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவை களை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அப்போ.1:3) அநேக தெளிவான திருஷ்டாந்தங் களினா் இயேசுவின் உயிர்த் தெழுதல் நிரூபிக்கப் படுகிறது. இச்செய்தியில் மிக முக்கியமான நான்கு ஆதாரங்களை வேதத்தின் அடிப்படை யிலே உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

### 1. காலியான கல்லறை (The empty tomb)

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் தாங்கள் ஆயத்தம் பண்ணியிருந்த கந்த வர்க்கங்களை எடுத்துக்கொண்டு, இயேசுவின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு வந்தார்கள். (ஓய்வுநாளானபின்பு மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருக்குச் சுகந்தவர்க்க மிடும்படி அவைகளை வாங்கிக்கொண்டு. (மாற்கு 16:1) வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள். (லூக்கா 24:1)

சுகந்தவர்க்கமிடுவதற்கு வந்த ஸ்திரீகள் ஒரு போதும் இயேசுவின் கல்லறை வெறுமையா யிருப்பதையும், திறந்திருப்பதையும் எதிர்பார்க்க வில்லை. அங்கே அவர்கள் கண்ட காட்சி கல்லறை காலியாயிருந்தது. உள்ளே பிரவேசித்து பார்க்கையில் இயேசுவின் சரீரத்தை அங்கே காணவில்லை. (உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல், லூக்கா 24:3) கல்லறையினால் இயேசுவின்

உயிர்த்தெழுதலை அடக்கி வைக்க முடிய வில்லை. இயேசுவின் திறந்த,காலியான கல்லறை பயத்தை அல்ல. அது தேவனின் மகிமையை காண்பிக்கிறது. வெறுமையான கல்லறை அச்சமயத்தில் வாழ்ந்த பிரதான ஆசாரியர் களையும், மூப்பர்களையும் வெறுமையாக்கியது. அவர்களுடைய பெருமை, மகிமை அனைத்தும் வீணாயின. தங்களுடைய வெறுமையை சமாளித்து, மூடிமறைப்பதற்காக போர்ச் சேவகர் களை காரணம் காட்டி, அவர்களை பலிகடா வாக்க விரும்பினார்கள். அதுவும் முடியாமற் போயிற்று. இவர்கள் மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து. நாங்கள் நித்திரை பண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள். என்று சொல்லுங்கள். மத் 28:12-13. ஆனாலும் அவருடைய உயிர்த்தெழுதல் உயிர்த்தெழுதலே. யாராலும் அவருடைய உயிர்த்தெழுதலை மறைத்து வைக்க முடியவில்லை. இன்றும் காலியான கல்லறை இயேசுவின் உயிர்த் தெழுதலுக்கு எடுத்துக்காட்டாக தகுந்த ஆதாரமாக இருக்கிறது.

## 2. புரட்டப்பட்ட கல் (The Rolled Stone)

இயேசுவினுடைய கல்லறையின் வாசலை பாதுகாப்பாக ஒரு கல்லினால் அடைத்து வைத்திருந்தார்கள். அடைத்து வைக்கப்பட்ட அந்த கல் புரட்டி தள்ளப்பட்டது ஒரு வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த ஆதாரமாகும். அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். (மத் 28:2) கல்லறையை பார்க்கச் சென்ற ஸ்திரீகள் கல்லறையின் வாசலில் இருக்கிற அந்த பெரிய கல்லை நமக்காக யார் புரட்டித் தள்ளுவார்கள் என்று ஒருவரோ டொருவர் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் ஏறிட்டுப் பார்க்கிறப்பொழுது அந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருந்தது. கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது. அவர்கள் ஏறிட்டுப் பார்க்கிற போது, அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். மாற்கு 16:3-4

கல் என்பது உண்மையை மறைப்பதற்கு ஒரு அடையாளம். அவருடைய உயிர்த் தெழுதலின் மூலமாக உண்மை மறைக்கப்பட வில்லை. அது வெளிப்படுத்தப்பட்டது. (Disclosed the concealed truth) புரட்டப்பட்ட கல் ஒரு பிரமிக்கத்தக்க செயலாகும். தேவன் செயலாற்ற ஆரம்பிக்கும்பொழுது அதை மனிதனால் கொண்டு வரும் எந்த தடை களினாலும் தடுத்து நிறுத்த முடியாது. புரட்டப் பட்ட கல் இயேசுவின் உயிர்த் தெழுதலுக்கு அடையாளமாயிருப்பது போல உங்களுடைய வாழ்க்கையிலும் நீங்கள் புதிய வாழ்க்கைக்குள் பிரவேசிக்க முடியாதபடிக்கு, உங்களை தடை செய்கிற அந்த தடை கற்கள் முற்றிலும் எடுத்துப் போடப்பட வேண்டும். அப்பொழுது உயிர்த் தெழுந்த இயேசு தரும் ஒரு புது வாழ்வு உங்களுக்குள்ளே காணப்படும்.

## 3. இயேசுவின் சரீரத்தில் சுற்றப்பட்ட வஸ்திரம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது (The burial cloth was folded and kept)

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு3. இயேசுவின் சரீரத்தை மெல்லிய துப்பட்டியிலே சுற்றி கல்லறைக்குள் வைத்தான். ஆனால் வாரத்தின் முதல் நாளில் கல்லறையை அடைத்திருந்த கல் தள்ளப்பட்டிருக்கிற செய்தியை ஸ்திரீகள் மூலமாக கேள்விப்பட்ட பேதுருவும் யோவானும் கல்லறையினிடத்திற்கு வந்து பார்க்கிற பொழுது இயேசுவின் தலையில் சுற்றியிருந்த துணி தனியாகவும், மற்ற துணி தனியாகவும் கிடக்கிறதை கண்டார்கள். சீமோன்

பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக் குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். யோவான் 20:6-7

இயேசுவின் சரீரம் அங்கே இல்லை. பார்க்க சென்றவர்களால் இயேசுவின் சரீரத்தை பார்க்க முடியவில்லை. அதற்கு பதிலாக சரீரம் சுற்றப்பட்ட வஸ்திரம் மட்டும் அங்கே காணப்பட்டது. இது எதைக் குறிக்கிறது என்றால் அவர் உயிர்த்தெழுதலின் மகிமையின் சரீரத்தையே பிரதிபலிக்கிறது. அதாவது அவர் உயிர்த்தெழுதலின் மூலமாக மகிமையின் சரீரத்திற்கு மாற்றப்பட்டார். அது மட்டு மில்லாமல் சுருட்டி வைக்கப்பட்டிருந்த அந்த வஸ்திரம் நம்பத்தக்க ஆதாரமாயிருக்கிறது.

## 4. தூதர்களின் சாட்சி (The Testimony of the Angels)

- தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன்.
- அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். மத் 28:5-6

❖ அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து, வெள்ளையங்கி தரித்தவனாய் வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபனைக் கண்டு பயந்தார்கள்.

❖ அவன் அவர்களை நோக்கி: பயப்படா திருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கே யில்லை. இதோ, அவரை வைத்த இடம். மாற் 16:5-6

- அந்த ஸ்திரீகள் பயப்பட்டுத் தலைகவிழ்ந்து தரையை நோக்கி: நிற்கையில், அந்த இரண்டு பேரும் அவர்களை நோக்கி: உயிரோடிருக் கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிற தென்ன?
- அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த் தெழுந்தார். லூக்கா 24:5-6

மேற்சொல்லப்பட்ட வசனங்களை நாம் உற்று நோக்கும்பொழுது இயேசு உயிர்த் தெழுந்தார் என்று கூறும் தூதர்களின் சாட்சி மெய்யானது மட்டுமன்றி, அது மிகுந்த நம்பத்தகுந்த ஆதாரத்தை வலியுறுத்துகின்றது. அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் அவரை வைத்த இடத்தை பாருங்கள் என்று சொல்வது நம்பத்தகுந்த சான்றாகும். மேற்கண்ட இந்த நான்கு ஆதாரங்களை மத்தேயு 28:1-6 மாற்கு 16:1-8லூக்கா 24:1-3,23-24 யோவான் 20:1-7 ஆகிய வேத பகுதிகளை நீங்கள் வாசிக்கும்பொழுது தெளிவாக புரிந்துக்கொள்ளலாம்.

இந்த செய்தியை வாசித்துக் கொண்டி ருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே, இயேசுவின் உயிர்த்தெழுதல் நம்முடைய விசுவாசத்திற்கு அடித்தளமாக, எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கை தருவதாக இருக்கிறது. இந்த உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை நீங்கள் விசுவாசித்து உங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும்பொழுது அவருடைய உயிர்த் தெழுதலின் வல்லமை உங்களுக்குள் செயலாற்ற ஆரம்பிக்கும். அப்பொழுது நீங்கள் பாவத்தி லிருந்தும் வியாதியிலிருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும் மற்றும் சகல விதமான பிரச்சனைகளிலிருந்தும் முற்றிலுமாக விடுதலையாக்கப்படுவீர்கள்.மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிக்கிறேன் என திருவுளம்பற்றின தேவன் இன்றும் உயிரோடிருக்கிறார். இந்த உயிர்த்தெழுதலின் நற்செய்தியை உங்களுக்குள் அடக்கி வைக்காதபடி அநேகருக்கு பறைசாற்றி தேவ இராஜ்யத்தை கட்ட முயற்சி செய்யுங்கள். ஆண்டவராகிய கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. தேவ சமாதானம் எப்பொழுதும் உங்களோடுகூட இருப்பதாக.

# ஆத்துமாவிலும், சரீரத்திலும் ஆசீர்வாதங்களையும், சுகத்தையும் பெற்றவர்களின் சாட்சிகள்

## சிறு பிராயத்திலிருந்து ஆட்டிசம் என்னும் வியாதியால் கஷ்டப்பட்ட சிறுவனை குணமாக்கிய தேவன்

**கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள், அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள். அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள் - சங்கீதம் 105 : 1, 2**



எனது குமாரன் சாலொமோன் டானியேல் பிறந்ததிலிருந்து ஆட்டிசம் என்னும் வியாதியால் கஷ்டப்பட்டான். அவன் வளர வளர அவனை கட்டுப்படுத்த மிகக்கடினமாக இருந்தது. எத்தனையோ வைத்தியம் செய்தும் அவன் குணமாகவில்லை. அப்படிப்பட்ட நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஐதராபாத் வரும் பொழுதெல்லாம் மகனை அழைத்துக் கொண்டு வருவோம். சகோதரர் அவர்கள் மனதுருகி செய்த ஜெபத்தினால் அவனுடைய செயல்களில் மாற்றம் வந்தது. Violent behavior குறைந்தது. நாளடைவில் மகன் முழுவதும் சுகமாகி இப்பொழுது மற்ற குழந்தைகளைப் போல நார்மல் நிலைக்கு வந்துவிட்டான்.

அதோடு நாங்கள் வீடு இல்லாமல் வாடகை வீட்டில் இருந்தோம். சொந்த வீடு இல்லாதவர்கள் என்னோடு சேர்ந்து ஜெபியுங்கள் கர்த்தர் உங்களுக்கு சொந்த வீட்டை தருவார் என்று கூறினார்கள். அதே போல நாங்கள் அந்த நாளில் ஜெபித்தோம். ஜெபத்தை கேட்ட தேவன் அழகிய வீட்டை கட்டும்படி அனுக்கிரகம் செய்தார். மேலும், எனக்கு நல்லதொரு அரசாங்க வேலையையும் கர்த்தர் கொடுத்தார்.

**- திரு. திலிப்குமார், ஐதராபாத்**

## எதிர்பாராத வெற்றியை தந்து எங்கள் விருப்பப்படி வீட்டை கட்டிக் கொடுத்த இயேசு!



எனது மனைவி உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டார். அவருக்கு வெற்றி கிடைப்பது என்பது மிகவும் அரிதாக இருந்தது. காரணம் அதிகமான பேர் அங்கு போட்டியிட்டனர். அந்த நிலையில் எனது தாய் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து என் மனைவிக்காக ஜெபித்தார்கள். ஜெபத்தை கேட்ட அதிசய தேவன் நாங்கள் ஆச்சரியப்படும் விதமாக என் மனைவிக்கு தேர்தலில் வெற்றி கிடைக்க கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மேலும், அதிக நாட்கள் வாடகை வீட்டில் குடியிருந்தோம். வீட்டு உரிமையாளரின் தொல்லை எங்களால் தாங்க முடியவில்லை. இந்நிலையில் ஆராதனா தொலைக்காட்சியில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சி காணும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. அந்நிகழ்ச்சியில் சகோதரர் அவர்கள் **"வீடு இல்லாதவர்களுக்கு கர்த்தர் வீட்டை**

**கட்டித் தருவார்"** என்று ஜெபித்த அந்த வார்த்தைகளை நாங்கள் முழுமையாக நம்பி னோம். சகோதரர் சொன்ன வாக்கின்படியே நாங்களும் தொடர்ந்து ஜெபித்தோம். அதின்படியே எல்லோரும் ஆச்சரியப்படும் வண்ணமாக கர்த்தர் எங்களுக்கு ஒரு வீட்டை கட்டித் தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. சந்திரமாலா ரமேஷ்பாபு, ஐதராபாத்**

## வாட்ஸ் அப் மூலம் செய்யப்பட்ட ஜெபத்தினால் மாடியிலிருந்து விழுந்து சுயநினைவை இழந்தவர் சுகமான அற்புதம்!



சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் எனது தந்தை மாடியிலிருந்து வழுக்கி கீழே விழுந்து விட்டார். அவருடைய C6, C7 அடுத்த பின் பகுதியிலுள்ள எலும்பு முறிந்துவிட்டது. உடனே அவர் மயக்க நிலைக்கு (Coma Stage-க்குப்) சென்றுவிட்டார். மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பிழைப்பது மிகவும் கஷ்டம், அப்படியே பிழைக்க அவசர அறுவை சிகிச்சை செய்தாலும் ஒருபோதும் நடக்க முடியாது, கைகளை பயன்படுத்த முடியாது. இப்படியே படுக்கையில் இருக்க வேண்டிய நிலை தான் ஏற்படும் என்று கூறிவிட்டனர். இதனால் நாங்கள் குடும்பமாக கலங்கி கண்ணீர் வடித்தோம். அந்த நேரத்தில் என் தந்தையின் போட்டோவை அன்பரின் ஊழிய வாட்ஸ் அப்பிற்கு (Whatsapp) அனுப்பி ஜெப உதவி நாடினோம். Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனது அப்பாவின் நிலை அறிந்து மிகுந்த மனதுருக்கத்துடன் ஜெபித்து வாக்குத்தத்த வசனங்களை அனுப்பினார். மேலும், **"நிச்சயமாக கர்த்தர் அற்புதம் செய்வார் பரிபூரண சுகத்தை தருவார், உடைந்த எலும்புகள் ஒன்று சேரும். சுயநினைவு திரும்பி எழும்பி நடந்து வேலைக்கு மீண்டும் செல்வார்"** என்று இயேசுவின் நாமத்தில் ஜெபித்தார்கள். அந்த ஜெபத்திற்கு பிறகு எனது தந்தையின் சரீர நிலைமையில் மாற்றம் துவங்கியது. அவர் படிப்படியாக சுகமடைந்து முற்றிலும் குணமானார். கை, கால்கள், மற்ற உறுப்புகள் அனைத்தும் செயல்பட துவங்கியது. பழைய நிலைமைக்கு அவர் வரும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். இன்று அவர் வேலைக்கு சென்று வருகின்றார். அவருக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர்களே மிகவும் ஆச்சரியப்படுகின்றனர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. பியூலா, ஐதராபாத்**

## கோவிட் நோயினால் மரணத் தருவாய்க்கு சென்ற குடும்பத்தினரை மீட்ட சர்வ வல்லவர்



எனது கணவர் ஜூன் 28, 2020ஆம் ஆண்டு கோவிட் 19 வியாதியால் பாதிக்கப்பட்டு மரணத் தருவாய்க்கு தள்ளப்பட்டார். **மூன்று முறை பரிசோதனை செய்தோம் பாசிடிவ் (Positive) என்றே ரிசல்ட் வந்தது. அவர் மிகவும் ஆபத்தான கட்டத்திற்குள் சென்றார். பிழைப்பது அரிது என்று கூறிவிட்டனர்.** ஜனவரி 2021 எனது குடும்பத்திலுள்ள அனைவருக்கும் இந்நோய் வந்துவிட்டது. நாங்கள் அனைவரும் மிகவும் சோர்ந்து போய்விட்டோம். **யார் எப்பொழுது மரிப்பார்கள் என்று பயந்து தத்தளித்துக் கொண்டிருந் தோம்.** இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொலைப்பேசியில்

தொடர்பு கொண்டு ஜெபித்தோம். **அவர்கள் செய்த ஊக்கமான ஜெபத்தை கர்த்தர் கேட்டு என் கணவரை முற்றிலும் கர்த்தர் சுகமாக்கினார்.** தேவ வல்லமையால் நாங்கள் அனைவரும் சுகமானோம். பயத்தை நீக்கி சுகத்தை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. ஷீபா, ஐதராபாத்**

## தனி ஜெபத்தில் செவிடும், ஊமையுமான ஆவி விரட்டப்பட்டு சுகமான சிறுவன்



எனது பேரன் அபிஷேக் **பிறந்ததிலிருந்து காது கேட்காமலும், வாய் பேசாமலும் இருப்பான்.** இதனால் நாங்கள் மிகவும் கவலையடைந்தோம். பேரனை பார்க்கும் பொழுதெல்லாம் எங்களுக்கு கண்ணீர் வரும். மார்ச் மாதம் **6ஆம் தேதி ஐதராபாத்தில் நடைபெற்ற தனி ஜெபத்திற்கு பேரனை நம்பிக்கையோடு அழைத்து வந்தோம். Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பேரனின் காதில் மூன்று முறை துநளரள துநளரள என்று கூறினார். அப்படி கூறிய வார்த்தைகள் பேரனுக்கு கேட்டது. அவன் உடன் தானே பேச ஆரம்பித்தான். நாங்கள் சொல்வதை புரிந்துகொள்ளவும் ஆரம்பித்தான். காதும் நன்றாக கேட்டது.** இது எங்களுக்கு மகிழ்ச்சியை தந்தது. கர்த்தர் செய்த மகத்தான அற்புதத்திற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.

**- ரமேஷ்பாபு ஶ்ரீவெந், ஐதராபாத்**

## பொருத்தனை ஜெபத்தை கேட்டு அற்புதங்களை செய்த வல்லவர்!

என் மகன் அஜித்சுதனுக்கு தொடர்ந்து காய்ச்சல், இருமல் ஐந்து நாட்களாக ஊசி மருந்தும் கொடுத்தும் நிற்கவில்லை. இரத்த பரிசோதனையிலும் ஒன்று மில்லை. ஆனால் காய்ச்சல் இருமல் நிற்கவில்லை. உடனே நான் சாட்சி கூறுவதாகவும், காணிக்கை செலுத்துவதாகவும் பொருத்தனை செய்தேன். அன்றே காய்ச்சல், இருமல் நின்றுவிட்டது. மருந்து மாத்திரை எடுக்கவில்லை. சுகம் தந்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்!

எனது சகோதரி சுகா யாபேஸ் திருமணமாகி பத்து மாதங்கள் கடந்து விட்டது. மூன்று முறை குழந்தை தங்கி தங்கி கலைந்துவிட்டது. நான் பொருத்தனை செய்தேன். சாட்சி கூறுவதாகவும் ஜெபித்தேன். மேலும் ஜனவரி மாதம் குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் வந்து இருவரும் கலந்து கொண்டார்கள். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபித்து சென்ற பிறகு குழந்தை தங்கிவிட்டது. பாசிடிவாக உள்ளது. தேவனுக்கு மகிமை!

தாய் புஷ்பம் அம்மாவிற்கு சிறுநீர் பிரச்சனை, சிறுநீர் கழித்த பின்பு சிறிது நேரம் கழித்து ஓர் நரம்பைப் பிடித்து வெடுக்கு வெடுக்கு என்று இழுக்கும். தொண்டையில் அடைப்பு உள்ளதுபோல சோறு விழுங்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். ஜெப எண்ணெய் கொடுத்து, பொருத்தனையோடு ஜெபித்தோம். தேவன் அம்மாவிற்கு அற்புதமான சுகத்தை கொடுத்தார்.

எனது இளைய மகள் அருள்நிவேதா நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவம் படிக்க

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

(MBBS) இடம் கிடைத்துவிட்டது. ஆனால் ஹாஸ்டல் கிடைக்கவில்லை. இன்னும் இரண்டு நாட்களுக்குள் என் மகளுக்கு ஹாஸ்டல் கிடைக்க வேண்டும், அப்பொழுது சாட்சி சொல்லுவதாக பொருத்தனை செய்தேன். மறுநாளே ஹாஸ்டலில் இருந்து தொலைப்பேசி வந்தது. இரண்டு தினங்களுக்குள் உங்கள் மகளை ஹாஸ்டலில் கொண்டு வந்து விடவும் என்று குறுஞ்செய்தி வந்தது. இதைப் பார்த்து மனதார கர்த்தரை துதித்தோம்.

**- திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை**

## முன் அட்டை உள்பக்கத்தொடர்ச்சி

**எனது பெயரை சொல்லி மேடைக்கு அழைத்தார்கள். இதைக் கேட்டு நான் திடுக்கிட்டேன். எனது பிரச்சனை இவர்களுக்கு எப்படி தெரியும் என்று ஆச்சரியப்பட்டேன்.** மீண்டும் மீண்டும் ஐயா அவர்கள் அழைத்தார்கள். நான் மேடைக்கு சென்றேன். அப்பொழுது மேடையில் உள்ள பெஞ்சில் என்னை படுக்க வைத்து எனது வயிற்றில் கை வைத்து "இந்த மகனின் வயிற்றில் உள்ள கேன்ஸர் கட்டிகள் அனைத்தும் இயேசுவின் நாமத்தில் வெளியே வரட்டும் என்று மிகவும் கண்ணீருடனும், மனதுருக்கத்துடனும் ஜெபித்தார்கள்". ஜெபத்திற்கு பிறகு எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. வல்லமை எனக்குள் இறங்கினதை உணர்ந்தேன். ஒருசில தினங்கள் கழித்து மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவர்கள் என்னை மீண்டும் ஒருமுறை பரிசோதனை



செய்யுமாறு கூறினார்கள். **அதின்படி பரிசோதனை செய்த பொழுது எனது வயிற்றில் கேன்ஸர் கட்டிகள் ஏதுமில்லை என்ற ரிசல்ட் வந்தது. மருத்துவ பரிசோதனை ஆதாரத்தையும் காண்பித்து, இந்த கூட்டத்தில் சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்துகின்றேன்.** இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கின்றேன். கர்த்தர் கொடுத்த அற்புத சுகத்திற்காக தேவனை நன்றியுடன் ஸ்தோத்தரிக்கின்றேன்.

**- திரு. வினோத்குமார், பட்டுக்கோட்டை**




## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
## (Renovation)
### புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை



**சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடா திருப்பேன் - ஏசாயா 41 : 17**

**அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கி யெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார் - ஏசாயா 42 : 3**

**மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மைசெய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன் - பிரசங்கி 3 : 12**

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே

**இந்த சிறியரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மத்தேயு 25:40ல்** இயேசு கூறினார். ஆம் அன்பானவர்களே் நாம் எளியவர்களை விசாரித்து அவர்கள் நல்வாழ்வை தேடும்பொழுது, பிரதிபலன் கருதாமல் அவர்களுக்கு உதவி செய்யும்பொழுது நாம் அதை இயேசுவுக்கே செய்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. உலகப் புகழ்பெற்ற அன்னை தெரஸா 'Sisters of Charity' என்னும் மிகப்பெரிய அறக் கட்டளை வைத்திருந்தார். அதில் குஷ்டரோகிகள், கைவிடப்பட்டவர்கள், காசநோயால் பாதிக்கப் பட்டவர்கள், கிராமத்தில் ஒதுக்கப் பட்டவர்கள், சமுதாயத்தில் வேண்டாம் என்று தள்ளப் பட்டவர்கள், தூக்கி எறியப்பட்ட வயது முதிர்ந்தோர், உடல் முழுவதும் ரணம், சீழ் பிடிக்கப்பட்டு எலிகளும், நாய்களும், பன்றிகளும் கடித்து தின்கிற அரைகுறை நடை பிணமாக கிடப்பவர்களை ஆற்றி தேற்றி அவர்கள் காயங்களை கட்டி, தன்னால் இயன்ற உதவிகளை செய்து, மருத்துவம் பார்த்து, அன்பு பாராட்டி அவர்களை பிழைக்க வைத்தார்.

ஒரு சமயம் ஒரு குறிப்பிட்ட மனிதன் அன்னை தெரஸாவைப் பற்றி தவறான எண்ணங்களோடு அவர்களை சந்திக்க வந்தான். அம்மா சேவை செய்த கூடாரத்தில் பெலவீனமான கதவை திறந்து பார்த்த பொழுது அவன் அம்மாவை அடிக்க கொண்டு வந்த கடப்பாறைகள், பெரிய பெரிய கட்டைகள் எல்லாம் அவனை அறியாமலேயே அவனது கரங்களிலிருந்து கீழே விழுந்து விட்டது. காரணம் அம்மா அவர்களின் அன்பு மாசற்றது, தெய்வீகப் பணி. எதிரிடையாக செயல்பட வந்த மனிதன் அம்மாவை பார்த்து **"உங்களுக்கு எப்படி இப்படிப்பட்ட சாக்கடையில் போட வேண்டிய மக்கள் மீது, எரிக்கப்பட வேண்டிய அரைகுறை பிணங்களின் மீது, ஒரு தாயைவிட, மருத்துவரை விட, செவிலியரை விட மேலான பாசம் வைக்க முடிகிறது?"** என்று கேட்ட பொழுது அம்மா அவர்கள் **"உலகத்தாரால் தள்ளப்பட்டு, குற்றுயிராக, பல நாள் குளிக்காமல், கிழிந்த வஸ்திரங்களை அணிந்த இவர்கள் முகத்தில் நான் இயேசுவை காண்கிறேன்"** என்றார். எத்தனை ஆச்சரியம் பாருங்கள். அதேபோலத் தான் நானும், ஊருக்கு ஒதுக்குப்புறமாக கைவிடப்பட்ட விதவைகள், எளியவர்கள், பெரியோர்கள், யாருமற்ற அநாதைகள், சிறுவர்கள், சிறுமிகள் இவர்களின் முகத்தில் இயேசுவை காண்கிறேன். நம்மைப் போல அவர்களுக்கு எந்த ஒரு வசதியும் இல்லை. இன்னும் சொல்ல வேண்டும் என்றால் பல பிள்ளைகளுக்கு கேக், பிரியாணி என்றால் என்னவென்றே தெரியாது. இந்த ஏழை பிள்ளைகளுக்கு நான் உங்கள் உதவியோடு தேவ பயத்தோடு, உண்மையோடு உதவி செய்கிறேன். வாழ்க்கையில் நம்பிக்கை எல்லாம் இழந்து சிறுமைப்பட்ட இந்த ஏழைகளை படிக்க வைத்து, உருவாக்கி, ஆளாக்குவது எத்தனை பெரிய நன்மையான காரியம். எங்களுக்கு எந்த ஒரு அரசாங்க உதவியும் அல்லது பெரிய நன்கொடைகள் கொடுக்கும் ஸ்தாபனமும்

இதுவரைக்கும் உதவியதே இல்லை. எனினும், கிறிஸ்துவின் அன்பு நெருக்கி ஏவுகிறபடியால் இந்த காரியங்களை தொடர்ந்து உங்கள் உதவியோடு செய்கின்றேன். மழை வந்தால் ஒழுகுகிற, வெயில் வந்தால் படுக்க முடியாத குடிசைகளில் வாழும் 100 விதவைகளுக்கு கடந்த மாதம் உதவிகள் செய்யப்பட்டது. அதுவும் அல்லாமல் எனது பிறந்த நாளை முன்னிட்டு 800 பேருக்கு நல்ல உணவும் கொடுக்கப்பட்டது. அதைக் குறித்து அடுத்த மாத பத்திரிக்கையில் காண்பீர்கள்.

வருகிற ஏப்ரல் மாதத்திலிருந்து இடிந்து விழும் நிலையில் உள்ள, மண் சுவரால் கட்டப்பட்டு இருக்கிற ஓலை குடிசையில் வாழுகிற, யாருமற்ற அநாதைகள், விதவைகளுக்கும், வயதானவர்களுக்கும் ஒரு சிறிய அளவில் நல்ல வீட்டை உண்டு பண்ணி தரலாம் என நினைக்கிறோம். நம்மால் பெரிய அளவில் வீடு கட்டி தர முடியாது. மண் சுவரை, ஓலைகளை அகற்றி ஓரளவு நன்றாக கட்டிக் கொடுக்க **Rs.50,000/-** முதல் **Rs.1,00,000/-**வரை தேவை. இந்த புதிய திட்டத்தை நாம் இப்பொழுது ஆரம்பிக்கலாம் என்று கர்த்தருக்குள் நினைக்கிறோம். எனவே அன்புள்ளம் கொண்ட நீங்கள் இப்படிப்பட்ட ஒரு ஏழைக்கு ஒரு வீட்டை கட்டித் தர முன்வரலாமே. கர்த்தர் நிச்சயம் இதற்குரிய பலனை திரும்ப தந்து உங்களை ஆசீர்வதிப்பார்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | |
|---|---|
| Bank A/c Name | : SJ Saves Trust |
| Account No. | : 36477148891 |
| Bank Name | : State Bank of India |
| Branch | : Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : SBIN 0000930 |
| A/c Type | : Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

ministryofjesus.in

drjane15

# சேலூர் செல்லம்பாளையம், ஜேடர்பாளையம், சின்னசோளிப்பாளையம் கிராம பிள்ளைகளுக்கு சகோதரர் உதவி வழங்குதல்













## கீழ்க்கண்ட இடிந்த, சுவரற்ற நிலையிலுள்ள வீடுகளை புதுப்பித்து கட்டித்தர உள்ளோம்.













# S.J.S.T. HOSPITAL

## கிராமப்புற மருத்துவ சேவை மையம்

**நான் காணாமற்போனதைத்தேடி, துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல் கொண்டதைத் திடப்படுத்துவேன்... - எசேக்கியேல் 34: 16**

மேற்கண்ட வசனத்தை நீங்கள் படிப்பதற்கு முன் **எசேக்கியேல் 34:14ஐ** படித்து பாருங்கள்,

**நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல்கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக்கொண்டு வராமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள்**

**- எசேக்கியேல் 34: 14**

உலகில் வாழும் அநேக மனிதர்கள் காயப்பட்ட, சிறுமைப்படுத்தப்பட்ட, வியாதி நிறைந்த மக்களை பற்றி நினைப்பதே இல்லை. அதிலும் மரண வியாதி என்றால் அவர்கள் பெற்ற பிள்ளைகள் கூட அவர்களை கவனிப்பதில்லை. சிலர் சீக்கிரம் பெற்றோர் மரிக்க வேண்டும், சீக்கிரம் அவர்களின் சொத்தை அபகரிக்க வேண்டும் என அவர்களை துக்கத்திலும், துயரத்திலும் சாகவிடுவார்கள். வேறு சிலருக்கு பிள்ளைகள் எல்லாம் அயல்நாட்டில் வேலை செய்கிறபடியால் அவர்கள் மருத்துவமனைக்கு போகவும், கவனிக்கவும் முடியாமல் தவிக்கும் நிலை. இன்று உலகில் எத்தனை மருத்துவமனைகள் ஆரம்பித்தாலும் வியாதிகளுக்கு பஞ்சமே இல்லை. எனவே தான் தியாக உள்ளத்தோடு நமது SJ ST கிராமப்புற மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பணம் இல்லாதபடியால் நல்ல சிகிச்சை பெற முடியாமல் அநேக ஏழைகள் இறந்துவிடுகிறார்கள். உதாரணமாக ஏழையான ஒருவன் டயாலிசீஸ் செய்ய முடியாமல் சிறுநீரகக் கோளாறால் இறந்துவிடுகிறார். அரசு மருத்துவமனைக்கு போனால் காத்திருக்க வேண்டி இருக்கிறபடியால் அதற்குள் சிலர் இறந்து விடுவார்கள். இப்படி நோயாளிகளுடைய வேதனையை பார்க்கும் பொழுது நமக்கு பரிதாபம் தான் வருகிறது. யார் இப்படிப்பட்டவர்களை குறித்து கவலைப் படுவார்கள்.

எனது வாழ்வில் நான் இரண்டாவது முறை மஞ்சள் காமாலை நோயால் மரிக்கும் தருவாயில் ஓடும்பொழுது என்னை மிகவும் நேசித்த கிறிஸ்தவர் அல்லாத மருத்துவர்கள் பரிதாபப் பட்டார்களே தவிர வேறு ஒருவரும் உதவ வரவில்லை. ஒரு கிறிஸ்தவனும் அதுவரைக்கும் நல்ல உதவி பெற்ற போதகர், பாஸ்டர்கள் கூட யாருமே உதவவில்லை. என் மனைவியும்,என் பிள்ளைகளும் மாத்திரமே கூட இருந்து என்னோடு பாடுபட்டார்கள். அடுப்பு கூட எரிக்காமல் நான் குடிக்கும் கஞ்சியை குடித்து முறுமுறுப்பு இல்லாமல் என்னை கவனித்தார்கள். அப்பொழுது தான் நான் யோசித்தேன், நல்ல டோனேஷன் வாங்கும்பொழுது, சுகமாய் இருக்கும் பொழுது, பணம் இருக்கும் பொழுது என்னை பார்க்க அநேக நண்பர்கள் வந்தார்கள். வேலைக்கு போக முடியாமல், வியாதியால் மரித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒருவரும் வரவில்லை. ஆனால் பரமன் இயேசு நேரடியாக வந்து என் ஜீவனை மீட்டார். அதற்கு பிற்பாடு தான் ஒரு தேவ ஊழியர் ஆண்டவரால் ஏவப்பட்டு வீட்டிற்கு வந்து ஆங்கில மருந்துகளால் இந்த வியாதி சுகமாகாது. இந்த வியாதியை சுகப்படுத்தும் நாட்டு மருந்து திருச்சி பொன்மலையில் இருக்கிறது என்று கூறினார். அந்த வைத்தியர் என்னை கண்டவுடன் பாசத்துடன் எங்களை வரவேற்று, அநேக நோயாளிகளுக்கு உதவி செய்வதாக தன்னைப் பற்றி கூறி, ஒன்பது வித மூலிகை வேர்களால் அரைத்த பானத்தை குடிக்கக் கொடுத்தார். அப்பொழுது எனது தலை

முடி எல்லாம் மஞ்சளாகி இருந்தது. கர்த்தர் எனக்கு அதின் பிறகு நல்ல சுகத்தை கொடுத்தார்.

எந்த ஒரு மருத்துவரும் வருகிற நோயாளிகளிடம் நீங்கள் எந்த மதம், எந்த ஜாதியை சேர்ந்தவர் என்றும், நீங்கள் பணக்காரரா? ஏழையா? என்றும் கேட்பதில்லை. உண்மையான மருத்துவர் என்றால் அவர்கள் செய்ய வேண்டிய சேவைகளை சரியாக செய்து, மருத்துவம் செய்து நோயாளியை காப்பாற்றுவார். இந்த அடிப்படையில் தான் SJST கிராமப்புற மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. எனவே நீங்கள் இதின் முன்னேற்றத்திற்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை அபரிவிதமாய் ஆசீர்வதிப்பார்.

## வாசகர்கள் கவனத்திற்கு

**இப்பத்திரிக்கையை வாசிக்கின்ற வாசகர்களாகிய உங்களில் யாருக்காவது நமது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் நீங்கள் வந்து சிகிச்சை பெறலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 96553 18991**

**வரும் வழி : திருச்சி மத்திய பேருந்துநிலையத்திலிருந்து திண்டுக்கல் சாலையில் (சுமார் 15 கி.மீ) உள்ள ஜே.ஜே. பொறியியல் கல்லூரி விடுதியின் எதிர்புறத்தில் நமது மருத்துவமனை உள்ளது.**

## தேவை

**அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் விண்ணப்பிக்கவும்.**




சென்னையில்

**Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்திக்க ஓர் அரிய வாய்ப்பு**

ஏப்ரல் 2021
புதன் கிழமை 14

நேரம் : காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை

இடம் : YMCA ரித்தர்டன் ரோடு, வெப்பேரி, சென்னை

தொடர்புக்கு : 94888 45627 & 97907 01873

# இயேசுவின் சிலுவை மரணத்தைப் பற்றிய அரிதான தகவல்கள்



## சிலுவை

எடை – 150 கிலோ
நீளம் – 15 அடி
அகலம் – 8 அடி

## ஆணிகள்

தடிமானம் – ¾ இன்ச்
நீளம் – 8 இன்ச்

**சிலுவை மரணத்தின் பொழுது கொல்கொதாவிற்கு செல்லும் வழியில் இயேசு மூன்று முறை தடுமாறிவிழுந்தார்.**

**17 மணிநேரங்கள் தண்ணீர் குடியாமல் அவர் மிகுந்த உபத்திரவங்களுக்கு உட்படுத்தப்பட்டார்.**

**இயேசுவின் சரீரத்தில் சுமார் 5480 பார்க்கக் கூடியகாயங்கள் இருந்தன.**

**150 மிகுந்த ஆழமான காயங்கள் அவருடைய முதுகு பகுதியில் மாத்திரம் இருந்தன.**

இயேசுவின்
தலையில்
17 நீளமுட்கள்
குத்தியது.

அவருடைய
இரத்தம்
முழுமையாக
சிந்தப்பட்டது.

350 போர் சேவகர்களும்,
500 குதிரை காலாட்களும்
இயேசுவை அடித்து
துன்புறுத்தினர்.

யூதர்களுடைய கால அட்டவணையின்படி
இயேசு அக் அயூர்வா கொஞ்சிதா
785ஆம் ஆண்டு நிஸான் மாதம் 15ம் நாள்
கொல்லப்பட்டார்.

அவருடையசிலுவையில் எழுதப்பட்ட
வார்த்தையின் அர்த்தம் நசரேனாகிய
இயேசு யூதர்களுக்கு ராஜா.

I - Jesus
N Nazarene
R Rexo
I Indoneus

லூக்கா என்கின்ற மருத்துவர் இயேசுவின்
மரணத்தை குறித்து சான்றிதழ் அளித்தார்.








இந்தாண்டு ஜனவரி 26ல் இந்திய குடியரசு தின விழாவின் போது சிறப்பு விருந்தினராக பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் பங்கேற்பதாக இருந்தது. ஆனால், பிரிட்டனில் திடீரென கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்ததால், பயணத்தை அவர் ரத்து செய்தார்.

இந்நிலையில் ஏப்ரல் மாத இறுதியில், அவர் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளதாக பிரிட்டன் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. பிரெக்சிட் எனப்படும் ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகிய பிறகு, பிரிட்டன் தன் பொருளாதார வர்த்தக உறவுகளுக்கான கொள்கைகளை வகுத்துள்ளது. அதன்படி இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் உள்ள வர்த்தக வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள பிரிட்டன் தயாராகி வருகிறது.

இந்தியாவுடன் ஏற்கனவே வலுவான நட்புறவு உள்ள நிலையில் விரிவான வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட உள்ளது. போரிஸ் ஜான்சன் இந்திய பயணத்தின்போது பிரதமர் உள்ளிட்டோரை சந்திக்கிறார். அப்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று அரிசி என்று சொன்னாலே எட்டிச் செல்கிறவர்களை நிறைய பார்க்க முடிகிறது. அரிசி சாப்பிட்டால் நீரிழிவு வரும், அரிசி சாப்பிட்டால் குண்டாகிவிடுவோம் போன்ற எண்ணங்கள் வேகமாக உருவாகி வருகிறது.

பழங்காலத்திலிருந்தே தினந்தோறும் வாழ்க்கை முழுவதும் சாப்பிடக் கூடிய ஓர் உணவாக அரிசியை உருவாக்கியிருக்கிறார்கள். மற்ற உணவுகள் உடலின் சில உறுப்புகளுக்கு மட்டுமே நன்மை பயக்கும். ஆனால் அரிசி உடல் உறுப்புகள் அனைத்துக்குமே பயன் தரக்கூடியது. எந்த நோயால் பாதிக்கப்பட்டிருந் தாலும் அரிசியால் செய்த உணவை எடுத்துக் கொள்ளலாம்.

அதனால் தான் காய்ச்சல் நேரத்தில் கூட அரிசிக் கஞ்சியைக் குடிக்கிறோம். இந்தியா, சீனா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாட்டு மக்கள் அதாவது உலக மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் அரிசி உணவைத்தான் எடுத்துக் கொள்கிறார்கள். முக்கியமாக நம் நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற சரியான உணவு அரிசி. அரிசியின் வரலாற்றைப் பார்க்கும்போது. இதன் தாவரப் பெயரான "ஒரைசா" என்பதே நம் தமிழ் மொழியிலிருந்துதான் தோன்றியிருக்கிறது. 2000-3000 முந்தைய அகநானூறு தொல்காப்பியம் நூல்களில் அரிசியின் வகைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

திருநெல்வேலி பக்கம் ஆதிச்சநல்லூர் மற்றும் பழனி பக்கத்தில் பொருந்தாள் என்ற ஊர்களில் அகழ்வாராய்ச்சியில், 2500 வருடங்களுக்கு முன்பு சேமித்து வைக்கப்பட்ட அரிசி பெட்டகங்களை கண்டெடுத்ததில், அந்த அரிசி பூச்சி, வண்டு இல்லாமல், இன்றுவரை கெட்டுப்போகாமல் இருப்பதைப் பார்த்தால் சிறந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விளைவித்து அறுவடை செய்யப் பட்டிருக்க வேண்டும் என்று ஆச்சரியப்படுகிறார்கள் அகழ்வாராய்ச்சியாளர்கள்.

உமி நீக்கப்படாத சிவப்பு கருப்பு அரிசி வகைகளில் ஆன்ட்டி ஆக்சிடென்ட்டுகளும், 18 வகையான அமினோ அமிலங்களும் இருப்பதால் உடலுக்கு தீங்குவிளைவிக்காத உணவாக அமெரிக்கன் கெமிக்கல் சொசைட்டி ஆய்விலும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இதிலிருந்தே நம் பாரம்பரிய அரிசியின் பெருமையை அறியலாம். பொதுவாக அரிசி உணவு களில் கலோரி அதிகம், கிளைசமிக் இன்டெக்ஸ் அதிகம் என்பதுதான் மக்களிடம் இருக்கும் பயத்துக்குக் காரணம். அதுவும் தவிர, பச்சரிசி நல்லதா? புழுங்கலரிசி நல்லதா? ஏன்பது மற்றொரு மிகப்பெரிய விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

# திருச்சியில் குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2021
**ஏப்ரல் 24**
சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 2 மணி வரை

**தேவசெய்தி : Dr. ஆனந்தஸ்திரா குடும்பத்தினர்**

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி
திரு. ஜெரால்டு - 82203 17472

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள்
திருமதி. ஆனிலெஸ்லி - 77081 53666

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

| நம்பிக்கை TELEVISION | தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள் | மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| திங்கள், செவ்வாய், புதன் காலை 6.30 – 7.00 | RAKSHANA TV சனி இரவு 8.30 – 9.00 | HARVEST TV சனி இரவு 07.30 – 08.00 |
| புதன் மதியம் 12.00 – 12.30 | ARADANA TV புதன் மாலை 6.00 – 6.30, சனி மதியம் 2.30 – 3.00 | **ஆங்கிலத்தில்** |
| வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.30 – 9.00 | SUBHAVAARTHA TELEVISION வெள்ளி மாலை 6.00 – 6.30 | GOODNEWS TELEVISION வியாழக்கிழமை இரவு 8.30 – 9.00 |



## வல்லமையுள்ள ஜெபங்கள்

நமது வலைதலம்
www.ministryofjesus.in
மற்றும் Dr jane Joshua
YouTube Channel-ல்
கண்டுமகிழுங்கள்

## சுவிசேஷம்- Gospel

எளிதாக இயேசுவை பற்றி சொல்ல
உதவிடும் காணொளி
ஆங்கிலம் மற்றும் தமிழிலில்
நமது YouTube Channel
Ministry of Jesus - dr anandastira
கண்டு மகிழுங்கள்
அநேகருக்கு பகிர்ந்திடுங்கள்



**ஊழியப் பாதையில் கர்த்தர்
செய்த வல்லமையான சாட்சிகள்
நமது Youtube & Website-ல்
காணத்தவறாதீர்கள்**